2005 ஏப்ரல் 1]

**262—**

## புதிய வட்டம்

***42172—திரு. இரா. வில்வநாதன்:**

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*30 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட சோளிங்கர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை ஒன்று சேர்த்து சோளிங்கர் வட்டம் ஏற்படுத்த அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**திரு. இரா. வில்வநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாராது வந்த மாமணியாய், வரலாற்று நன்கொடையாகத் தோன்றி, தமிழகத்தை வாழ்வித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே எங்கள் சோளிங்கர் தொகுதியிலுள்ள மலைக் கோயிலுக்கு* Rope Car *திட்டத்தை 4 கோடி ரூபாய் அளவிலே அறிவித்து அதைச் செயல்படுத்தவிருக்கின்ற அம்மா அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய சோளிங்கர் தொகுதியிலே 86 ஊராட்சிகளும், 2 பேரூராட்சிகளும் இருந்தன. இப்பொழுது 2 சிறப்பு ஊராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன. அதிலே காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் 55 ஊராட்சிகளும், சோளிங்கர் ஒன்றியத்தில் 25 ஊராட்சிகளும், நெமிலி ஒன்றியத்தில் 6 ஊராட்சிகளும் ஆக 86 ஊராட்சிகளும், 2 பேரூராட்சிகளும் இருக்கின்றன. காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் மட்டும் காவேரிப்பாக்கம், பாணாவரம், பாராங்கி ஆகிய 3 பிர்க்காக்கள் உள்ளன. என்னுடைய தொகுதியின்* Headquarter *ஆன சோளிங்கரில் 1 பிர்க்கா உள்ளது. அரசினுடைய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு 4 பிர்க்காக்கள் இருந்தால் ஒரு வட்டம்*

அமைக்கலாம் என்ற விதியின்கீழ், என்னுடைய தொகுதியிலுள்ள சோளிங்கரை வட்டமாக ஆக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்கின்றேன். அப்படி அந்த 4 பிர்க்காக்கள் போதவில்லையென்று சொன்னால், சோளிங்கர் பகுதியைச் சுற்றியுள்ள வாலாஜா ஒன்றியம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், காட்பாடி ஒன்றியம் போன்ற ஒன்றியங்களிலிருந்து சில பிர்க்காக்களை எடுத்துக்கொண்டுகூட—600 சதுர கி.மீ. அளவுக்கு வருவாய் வரக்கூடிய நிலப்பரப்பு உள்ளது. மற்றும் TVS Company, Textiles, வரலாற்றுச் சிறப்புமிக்க வைணவத் திருக்கோயில் மற்றும் பல பஸ் கம்பெனிகள், நீதிமன்றம், தமிழ்நாட்டிலேயே முதன்மை பெற்ற அரசு மருத்துவமனை, Railway Station போன்ற பெரும் வசதிகளைக் கொண்ட சோளிங்கர் நகரத்திலே 30 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட சோளிங்கர் நகரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வட்டத்தை ஏற்படுத்த முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான எல்லைகளை வரையறுப்பதற்காக நியமிக்கப்பட்ட எல்லை வரையறை ஆணையம் 15–2–2004 அன்று உள்ளவாறு புதிய ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் வட்டம் போன்ற நிருவாக அலகுகளின் எல்லைகளை எவ்வகையிலும் திருத்தி அமைக்கவோ, மாற்றி அமைக்கவோ கூடாது எனவும், புதிய நிருவாக அலகுகளை உருவாக்குதல், நிருவாக அலகுகளை ஒருங்கிணைத்தல் போன்றவற்றிற்கு எல்லை வரையறைப் பணி முடியும் வரை தடை விதிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு இருப்பதால், சோளிங்கரை தலைமையிடமாகக் கொண்ட தாலுகா ஏற்படுத்தக் கோரும் கோரிக்கைமீது தற்போது நடவடிக்கை எடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துகொள்கின்றேன். இருப்பினும், எல்லை வரையறைப் பணி முடிந்தவுடன், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–05

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற வார்த்தைக்கு நன்றியைக் கூறி, சோளிங்கரிலிருந்து அரக்கோணம் செல்வதாக இருந்தால் 30 கிலோ மீட்டரும், வாலாஜா செல்வதாக இருந்தால் 30 கிலோ மீட்டரும், காவேரிப்பாக்கத்திலிருந்து

2005 ஏப்ரல் 1]

அரக்கோணம் செல்வதாக இருந்தால் 40 கிலோ மீட்டரும் சென்று, அரசு தாலுகா அலுவலகங்களைச் சென்றடைய வேண்டியிருக்கிறது. சட்டம்—ஒழுங்கு மற்றும் நெசவாளர் பிரச்சினை, கூலித் தொழிலாளர்கள் பிரச்சினை ஏற்படுகிறபோது அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீண்ட நெடுந்தூரம் செல்ல வேண்டிய காரணத்தால், தற்போது அரக்கோணம் வட்டத்தில் 8 பிர்க்காக்களும், 145 கிராமங்களும் உள்ளன, அவற்றைப் பிரித்துக்கூட வருங்காலங்களில் புதிய வட்டம் பிரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையினை வைத்து, நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்திலே புதிதாக ஒரு வட்டத்தை உருவாக்க வேண்டும் என்று சொன்னால், அரசு என்னென்ன விதிமுறைகளை வைத்திருக்கிறது என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்றால், குறைந்த அளவு அதனுடைய பரப்பளவு 250 சதுர கிலோ மீட்டர் முதல் அதிக அளவு 2,000 சதுர கிலோ மீட்டர் வரை இருக்க வேண்டும். மக்கள்தொகை குறைந்த அளவு ஒரு இலட்சம் முதல் அதிக அளவு 5,50,000 இருக்க வேண்டும். வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை, குறைந்த அளவு 30 வருவாய் கிராமங்கள் இருக்க வேண்டும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 263, டாக்டர் சி. விஜயபாஸ்கர், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**263—**

**தொழில்நுட்பப் பூங்கா**

***42835—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?